# புதுச்சேரி நகராட்சி
## வருவாய் பிரிவு – I

எண்.1387/பு.ந./வ.அ.1/2020-21 தேதி : 01-08-2021

## செய்தி குறிப்பு

**<u>கேபிள் T.V. கேளிக்கை வரி செலுத்தாத நிலுவைதாரர்களின் இணைப்பு துண்டிப்பு மற்றும் ஜப்தி நடவடிக்கை 05.08.2021 முதல் தொடக்கம்</u>**

புதுச்சேரி நகராட்சி எல்லைக்குள் 72 கேபிள் T.V. ஆபரேட்டர்கள் உள்ளனர். இவர்களில் எவரும் புதுச்சேரி நகராட்சியில் பதிவு செய்து கொள்ளவில்லை, மாதாந்திர விவர பட்டியலும் சமர்ப்பிக்கவில்லை, சரியான கேபிள் இணைப்புகளுக்கான விவரங்களை சமர்ப்பித்து அதற்குண்டான கேளிக்கை வரியையும் 2018-19 முதல் செலுத்தவில்லை. சமீபத்தில் சென்னை உயர்நீதி மன்றம் கேபிள் T.V. நலவாழ்வு சங்கத்தினர் தொடுத்திருந்த அனைத்து ரிட் மனுக்களையும் தள்ளுபடி செய்ததுடன் புதுச்சேரி நகராட்சிகள் (திருத்தம்) சட்டம், 1999 மற்றும் புதுச்சேரி நகராட்சிகள் கேளிக்கை வரி (திருத்தம்) [விதிகள்], 1999-ன் படி நகராட்சிகளுக்கு கேளிக்கை வரி விதித்து வசூலிக்க முழு அதிகாரம் உண்டு என்று தீர்ப்பு அளித்தது. இதன் தொடர்ச்சியாக அனைத்து கேபிள் T.V. ஆப்ரேட்டர்களுக்கும் 09.07.2021 அன்று சரியான கேபிள் இணைப்பு எண்ணிக்கை மற்றும் மாதாந்திர சந்தா தொகை ஆகிய விவரங்களை ஐந்து தினங்களுக்குள் சமர்ப்பிக்க கேட்டு நோட்டீஸ் அனுப்பிவைக்கப்பட்டது. இதற்கு கேபிள் T.V. ஆபரேட்டர்கள் எவரும் இதுவரை விவர பட்டியல் சமர்ப்பிக்கவில்லை.

அவ்வாறு விவர பட்டியல் சமர்ப்பிக்காத பட்சத்தில் நகராட்சி கேளிக்கை வரி அதிகாரி விசாரணை செய்து அதில் சேகரிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் கேளிக்கை வரி விதிக்க மேற்குறிப்பிட்ட விதிகள் 69-ன் படி கேளிக்கை வரி அதிகாரிக்கு முழு அதிகாரம் உண்டு. புதுச்சேரி நகராட்சியானது வருவாய் ஊழியர்களை கடந்த 2018-ஆம் ஆண்டு அனைத்து வீடுகளுக்கும் அனுப்பி கேபிள் T.V. கணக்கெடுப்பு நடத்தியது. அதில் 35,448 இணைப்புகள் கண்டறியப்பட்டது. கேளிக்கை வரி என்பது கேபிள் T.V. ஆபரேட்டர்கள் சந்தாதாரரிடமிருந்து வசூலிக்கும் மாதாந்திர சந்தா தொகையில் 10 விழுக்காடு கேளிக்கை வரி செலுத்தப்பட வேண்டும். கேபிள் ஆப்ரேட்டர்கள் எவரும் விவரப்பட்டியல் சமர்பிக்காத நிலையில் மேற்சொன்ன கணக்கெடுப்பில்/ கள விசாரணையில் கண்டறியப்பட்ட இணைப்புகளின் எண்ணிக்கை மற்றும் சந்தா தொகை ஆகியவற்றின் படி ஒவ்வொரு கேபிள் T.V. ஆப்ரேட்டரும், தான் செலுத்த வேண்டிய மாதாந்திர கேளிக்கை வரித்தொகையை நிர்ணயம் செய்து இத்தொகையை ஏழு தினங்களுக்குள் செலுத்தவேண்டும் என்றும், தவறும் பட்சத்தில், ஒளிபரப்பு உபகரணங்கள் பறிமுதல் செய்வதுடன் இணைப்புகளும் துண்டிக்கப்படும் என்றும் அனைத்து கேபிள் ஆப்ரேட்டர்களுக்கும் 15.07.2021 அன்று உத்தரவு அனுப்பிவைக்கப்பட்டது.

-2/---

இத்தகைய நடவடிக்கைகளுக்கு பிறகும் கேபிள் T.V. கேளிக்கை வரி செலுத்தாத நிலுவைதாரர்களின் கேபிள் இனைப்புகளை வரும் 05.08.2021 முதல், வேறு முன்னறிவிப்பு ஏதுமின்றி கண்டிப்பாக துண்டிப்பு செய்யப்படும். அத்துடன் ஒளிபரப்பு சாதனங்கள் ஜப்தி செய்யப்படும் மேலும் நிலுவைத் தொகையில் 10 விழுக்காடு வட்டி விதிக்கப்படும் இதனால் ஏற்படும் சிரமங்களை பொதுமக்கள் அனுசரித்து புதுச்சேரி நகராட்சிக்கு ஒத்துழைப்பு நல்குமாறு இதன்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**(சி. சிவகுமார்)**
**ஆணையர்**

---

**It is requested that the above matter may please be published under news items in your daily in the next issue.**

பெறுநர்:

1. செய்திப் பிரிவு மேலாளர், தினமலர், புதுச்சேரி
2. செய்திப் பிரிவு மேலாளர், தினத்தந்தி, புதுச்சேரி
3. செய்திப் பிரிவு மேலாளர், தினகரன், புதுச்சேரி
4. செய்திப் பிரிவு மேலாளர், தினமணி, புதுச்சேரி
5. செய்திப் பிரிவு மேலாளர், தமிழ்முரசு, புதுச்சேரி
6. செய்திப் பிரிவு மேலாளர், மாலைமலர், புதுச்சேரி
7. செய்திப் பிரிவு மேலாளர், இந்து, புதுச்சேரி
8. செய்திப் பிரிவு மேலாளர், இந்தியன் எக்ஸ்பிரஸ் அலுவலகம், புதுச்சேரி

o/c

REVENUE OFFICER - I
PUDUCHERRY MUNICIPALITY
PUDUCHERRY